PRIMARY SCHOOL

# END-OF-YEAR EXAMINATION

## TAMIL LANGUAGE

## *PRIMARY 5*

Name : ______________________________ (    )

Class : Primary 5 (    )

Date :

Duration : 1 hr 40 mins

**INSTRUCTIONS TO CANDIDATES**


DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.

FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.

ANSWER ALL QUESTIONS.

| MAXIMUM MARKS | MARKS OBTAINED |
|---|---|
| 90 | |

# P5 SA2
# TESTPAPER 3



புதுவீடு
சீர்த்திருத்தும் பணி
ஒரு மாதம் கழித்து
அழகாக

பொருட்களை
பத்திரமாக
தனியறை
ஆச்சரியமாக

## ‘அ’ பிரிவு

**வேற்றுமை**

1 முதல் 6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(12 மதிப்பெண்கள்)

சங்கர் என்பவர் ஒரு தபால்காரர். அவர் மிகவும் ஏழை. அவர் ஒரு முறை தன் நண்பர் (1)_______ பணம் கடன் வாங்கியிருந்தார். அந்தப் பணத்தை எப்படி திருப்பிக்கொடுப்பது என்று சங்கர் கவலைப்பட்டார். ஒரு நாள், திருமதி மீனா என்பவர் தன் தோழி (2)_______ ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதில் நிறைய பணமும் இருந்தது. அதைப் பார்த்த சங்கர் அந்தப் பணத்தை எடுத்துத் தன் கடனை அடைத்தார். அடுத்தவருக்குச் சேர வேண்டிய பணத்தை எடுத்துத் தன் கடனை அடைத்ததால் சங்கர் நிம்மதியில்லாமல் தவித்தார். மறுநாள், சங்கர் திருமதி மீனாவைச் சந்தித்து (3)_______ கூறினார். தான் இருந்த (4)_______ என்ன செய்வதென்று தெரியாமல் தவறு செய்துவிட்டதாகக் கூறி மன்னிப்புக் கேட்டார். திருமதி மீனா சங்கரை மன்னித்தார். மேலும் அவர் சங்கருக்கு (5)_______ முடிந்த பண உதவியைச் செய்தார். சங்கர் அவரைப் பார்த்து (6)_______ கைக்கூப்பினார். அன்றிலிருந்து சங்கர் எப்போதும் நேர்மையாகவே நடந்துகொண்டார்.

1. (1) ஒருவருக்கு
   (2) ஒருவரிடம்
   (3) ஒருவரின்
   (4) ஒருவரது

   (   )

2. (1) மாலதியின்
   (2) மாலதியிடம்
   (3) மாலதியின்
   (4) மாலதிக்கு

   (   )

3. (1) நடந்ததை

(2) நடந்ததில்

(3) நடந்ததிலிருந்து

(4) நடந்ததால்

4. (1) சூழ்நிலைக்கு

(2) சூழ்நிலையில்

(3) சூழ்நிலையின்

(4) சூழ்நிலையை

5. (1) தன்னுடைய

(2) தன்னை

(3) தன்னோடு

(4) தன்னால்

6. (1) நன்றியை

(2) நன்றியால்

(3) நன்றியுடன்

(4) நன்றியின்

செய்யுள் / பழமொழி

7 முதல் 12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

7. நிழலின் அருமை ______________ தெரியும்.

(1) வீட்டில்
(2) வெயிலில்
(3) வழியில்
(4) நிழலில்

( )

8. ______________ மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

(1) சொல்லுக்கு
(2) செலவுக்கு
(3) வரவுக்கு
(4) அளவுக்கு

( )

9. உடையவன் பாராத ______________ ஒரு முழம் கட்டை.

(1) செயல்
(2) வேலை
(3) தொழில்
(4) சேவை

( )

10. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் ________________________.

(1) பலர்க்கு

(2) சிலர்க்கு

(3) பிறர்க்கு ( )

(4) அவர்க்கு

11. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
________________________ கொல்லும் சினம்.

(1) தன்னையே

(2) பிறரையே

(3) என்னையே ( )

(4) உன்னையே

12. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் ________________________.

(1) விலை

(2) சிலை

(3) தலை ( )

(4) மலை

<u>தெரிவு விடைக் கருத்தறிதல்</u>
பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

ஓர் ஊரில் ஏழைப் பெண்மனி ஒருத்தி இருந்தாள். அவளுக்கு இரண்டு மகன்கள் இருந்தார்கள். தினமும் அவர்கள் அந்த ஊர் மக்களின் இல்லங்களுக்குச் சென்று உணவைத் தானமாகப் பெற்று வந்தனர். சில நேரங்களில் யாரும் அவர்களுக்கு உணவு கொடுக்க மாட்டார்கள். அப்போது அவர்கள் அன்று முழுவதும் சாப்பிடாமல் இருப்பார்கள்.

ஒரு நாள் பெண்மனியும் அவளது பிள்ளைகளும் வழக்கம்போல் உணவு பெற்று வர தெருவில் நடந்து வந்தார்கள். நீண்ட நேரமாகியும் அவர்கள் உண்பதற்கு உணவே கிடைக்கவில்லை. அப்போது சாலை ஓரத்தில் சில பனை ஓலைகள் விழுந்து கிடப்பதைக் கண்டார்கள். தங்கள் பசியைப் ***போக்க*** வேறு வழி இல்லாததால் அவர்கள் அந்தப் பனை ஓலைகளைச் சந்தையில் விற்றுவிட முடிவுசெய்தார்கள்.

அவர்கள் பனை ஓலைகளைத் தூக்கிக்கொண்டு நடந்து சென்றார்கள். அப்போது வழியில் அவர்கள் அந்த ஊரில் இருந்த செல்வந்தர் ஒருவரைச் சந்தித்தனர். அவரைக் கண்டதும் பெண்மனி, "ஐயா! நாங்கள் சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகின்றன. இந்த ஏழைகளுக்கு நீங்கள் ஏதாவது கொடுத்து உதவினால் நாங்கள் உணவு வாங்கி உண்போம்," என்று பரிதாபமாகக் கூறினாள்.

அவர்களைப் பார்த்தச் செல்வந்தர், "இந்தப் பனை ஓலைகளை எதற்காக எடுத்துச் செல்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்குப் பெண்மனி அவற்றைச் சந்தையில் விற்பதற்கு எடுத்துச் செல்வதாகக் கூறினாள். உடனே செல்வந்தர் தனக்குப் பனை ஓலைகளை பொன்னாக மாற்றும் மந்திரம் தெரியும் என்றும் அந்த மந்திரத்தைப் பெண்மனியின் மகன்கள் இருவருக்கும் ***போதிப்பதாகவும்*** கூறினார்.

செல்வந்தர் கூறியதைக் கேட்டப் பெண்மனியும் அவளது மகன்களும் மலைத்தனர். இருப்பினும் பெண்மனி தன் மகன்களைச் செல்வந்தருடன் அனுப்பி வைத்தாள். ஒரு வாரம் கழிந்தது. பெண்மனியின் மகன்கள் வீடு திரும்பினார்கள். மூத்த மகன் தானும் அவன் தம்பியும் செல்வந்தரிடம் பனை ஓலைகளால் அழகிய பெட்டி, கூடை, தொப்பி போன்றவற்றைச் செய்ய கற்றுக்கொண்டதாகக் கூறினான். இதைக் கேட்டுப் பெண்மனி செல்வந்தர் தன்னை மோசம் செய்துவிட்டதாக எண்ணினாள்.

அப்போது இளைய மகன், "அம்மா, நாம் பனை ஓலைகளை விற்றபோது நமக்குக் குறைவான பணமே கிடைத்தது. அந்த ஓலைகளை நாம் அழகிய பொருட்களாக செய்து விற்றால் மக்கள் அவற்றை விரும்பி வாங்குவார்கள். நாமும் அதிக பணம் சம்பாதித்து ***வளமாக*** வாழலாம் என செல்வந்தர் கூறினார்," என்று கூறினான்.

இதைக் கேட்டுப் பெண்மனி, "பிறரிடம் பிச்சை எடுத்து வாழ்வதை விட உழைத்து வாழ்வதே சிறந்தது என்பதை செல்வந்தர் நமக்கு உணர்த்திவிட்டார்," என்று தன் மகன்களிடம் கூறினாள். பின் அவர்கள் மூவரும் செல்வந்தரின் வீட்டுக்குச் சென்று அவருக்கு நன்றி உரைத்தார்கள்.

---

13 முதல் 17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

13. பெண்மனியும் அவள் பிள்ளைகளும் எப்போது பட்டினி கிடப்பார்கள்?

(1) அவர்கள் ஏழையாக இருக்கும் போது
(2) அவர்கள் மற்றவர்களிடம் பிச்சை கேட்காதபோது
(3) அவர்களுக்கு யாரும் பிச்சை போடாதபோது
(4) அவர்களிடம் பணம் இல்லாதபோது

( )

14. செல்வந்தரைக் கண்ட பெண்மணி அவரிடம் என்ன கேட்டாள்?

(1) கொஞ்சம் உணவு கொடுக்கும்படிக் கேட்டாள்

(2) பண உதவி செய்யும்படிக் கேட்டாள் ( )

(3) பனை ஓலைகளை வாங்கிக்கொள்ளும்படிக் கேட்டாள்

(4) தன் பிள்ளைகளுக்கு உதவும்படிக் கேட்டாள்

15. பெண்மணியும் அவள் பிள்ளைகளும் திகைப்பு அடைய காரணம் என்ன?

(1) செல்வந்தர் அவர்களுக்கு உதவப் போவதாகக் கூறியதால்

(2) செல்வந்தர் மகன்களுக்கு மந்திரம் போதிப்பதாகக் கூறியதால் ( )

(3) செல்வந்தர் தன்னால் பனை ஓலையைத் தங்கமாக்க இயலும் என்று கூறியதால்

(4) செல்வந்தர் தனக்கு மந்திரம் செய்ய தெரியும் என்று கூறியதால்

16. செல்வந்தர் தன்னை ஏமாற்றிவிட்டதாகப் பெண்மணி ஏன் கருதினாள்?

(1) ஒரு வாரம் கழித்து மகன்கள் வீடு திரும்பியதால்

(2) செல்வந்தர் எந்த மந்திரத்தையும் கற்றுக்கொடுக்காததால் ( )

(3) செல்வந்தர் பொருள்கள் செய்யக் கற்றுக்கொடுத்ததால்

(4) செல்வந்தர் அவர்கள் வளமாக வாழ வழி செய்ததால்

17. செல்வந்தர் பெண்மணிக்கு உணர்த்திய கருத்து என்ன?

(1) மகன்களை நம்பி வாழக்கூடாது என்பது

(2) மந்திரங்களை நம்பி வாழக்கூடாது என்பது

(3) பிறர் பொருள் மீது ஆசைப்படக் கூடாது என்பது ( )

(4) பிச்சையெடுத்து வாழ்வது இழிவானது என்பது

<u>சொற்பொருள்</u>

18 முதல் 20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. பின்னர், OAS விடைத் தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(6 மதிப்பெண்கள்)

18. போக்க

(1) தாங்க
(2) அடக்க
(3) தீர்க்க
(4) முடிக்க

( )

19. போதிப்பதாக

(1) சொல்வதாக
(2) கற்பிப்பதாக
(3) தெரிவிப்பதாக
(4) அறிவிப்பதாக

( )

20. வளமாக

(1) செழிப்பாக
(2) நலமாக
(3) நிம்மதியாக
(4) மகிழ்ச்சியாக

( )

**கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

ஆச்சரியம் ஆனால் உண்மை!

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் 1 முதல் – 30 வரை

கண்மணி அழகுபராமரிப்பு நிறுவனம் வழங்கும்

புதிய சேவைகள்!




- குறைந்த கட்டணத்தில் முகத்திலுள்ள கரும்புள்ளிகளை அகற்றிப் பளபளக்கும் சருமத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்!
- உடல் எடையைக் குறைக்க விரும்புவோருக்கு நல்ல சந்தர்ப்பம்! 50% விலை தள்ளுபடி!!
- முடி உதிர்வதைத் தடுத்து அடர்த்தியான கூந்தல் வேண்டுமா? எங்களை நாடுங்கள்! 50% விலை தள்ளுபடி!!
- முதல் 50 வாடிக்கையாளர்களுக்கு இலவச முகப் பராமரிப்பு ஆலோசனையோடு $50 பற்றுச்சீட்டும் வழங்கப்படும்.

இனியும் தாமதம் வேண்டாம்!

உடனே தொடர்பு கொள்ளுங்கள்!

*61234567*



திருப்தி இல்லையேல் பணம் திரும்பக் கொடுக்கப்படும்!!!

21 முதல் 23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

21. கண்மணி நிறுவனம் எத்தகைய சேவைகளை வழங்குகிறது ?

(1) ஆரோக்கிய உடலுக்கான சேவைகளை

(2) அழகிய கூந்தல் பராமரிப்புச் சேவைகளை

(3) அழகு பராமரிப்புச் சேவைகளை ( )

(4) புதிய ஆலோசனைச் சேவைகளை

22. இந்நிறுவனத்திற்கு வரும் 55-ஆவது வாடிக்கையாளர் எத்தகையச் சலுகையைப் பெறமாட்டார் ?

(1) $50 மதிப்புள்ள அழகுப் பொருள்கள் பெறுவதை

(2) இலவச முகப் பராமரிப்பு ஆலோசனை பெறுவதை

(3) புதிய சேவைக்கான 50% தள்ளுபடி விலையைப் பெறுவதை ( )

(4) குறைந்த கட்டணத்தில் முக அழகைப் பெறுவதை

23. திருப்தி அடையாத வாடிக்கையாளர்களுக்கு எத்தகைய உத்தரவாதம் அளிக்கப்படுகிறது ?

(1) இலவச சேவை வழங்கப்படும்

(2) பற்றுச்சீட்டுகள் கொடுக்கப்படும்

(3) முகப் பராமரிப்பு ஆலோசனை வழங்கப்படும் ( )

(4) வாடிக்கையாளர்களுக்குத் தங்கள் பணம் திரும்பத் தரப்படும்

“ஆ”

<u>ஒலி வேறுபாட்டுச் சொற்கள்</u>

பின்வரும் பகுதியில் 24 முதல் 28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான **ஒலி வேறுபாட்டுச் சொற்கள்** இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

24. என் தம்பி என்னுடைய புத்தகத்தில் தண்ணீரைக் கொட்டிவிட்டான். நான் செய்த வீட்டுப்பாடம் எல்லாம் ______________ ஆனது. 24. (   )

25. காட்டில் ஒரு மான் ஓடுவதை வேடன் கண்டான். அவன் தன் வில், ______________, ஆகியவற்றை எடுத்து மானைக் கொல்லக் குறி வைத்தான். 25. (   )

26. என் தங்கைக்குக் காய்கறி சாப்பிடப் பிடிக்காது. அவள் தன் உணவில் இருக்கும் காய்கறிகளை ______________ வைத்துவிட்டுச் சாப்பிடுவாள். 26. (   )

27. குமரன் ஐம்பது கிலோ ______________ தூக்கும் போட்டியில் கலந்துகொண்டான். இறுதியில் அவனுக்கே முதல் பரிசு கிடைத்தது. 27. (   )

28. பரதநாட்டியம் என்பது ஓர் அற்புதமான இந்திய ______________. சிங்கப்பூரில் பலர் பரதநாட்டியத்தை விரும்பிக் கற்கின்றனர். 28. (   )

| | |
|---|---|
| 1. பாணம் | 2. களை |
| 3. விலக்கி | 4. பாழ் |
| 5. கனம | 6. விளக்கி |
| 7. பால் | 8. பானம் |
| 9. கலை | 10. கணம் |



10

ஒன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் 29 முதல் 35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

ஒரு முறை குமரப்பன், முருகப்பன் என்ற இரண்டு நண்பர்கள் பாலைவனத்தைக் கடந்து சென்றனர். அவர்களின் பயணத்தின் ஒரு கட்டத்தில் இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு **(29)**______. அதனால் குமரப்பன் முருகப்பனை அறைந்துவிட்டான். 29 ( )
முருகப்பன் **(30)**______ போனான். பின்பு அவன், "இன்று என் நண்பன் என்னை அறைந்துவிட்டான்," என்று மணலில் எழுதினான். பிறகு அவர்கள் மேலும் சிறிது 30 ( )
தூரம் நடந்து ஒரு பாலைவனச் சோலையை **(31)**______. இருவரும் குளிப்பதற்காக அங்கிருந்த குளத்தினுள் இறங்கினார்கள். 31 ( )

திடீரென்று முருகப்பன் குளத்திலிருந்த வழுவழுப்பான பாறையில் **(32)**______ 32 ( )
நீருக்குள் மூழ்கத் தொடங்கினான். சற்றும் **(33)**______ குமரப்பன் நீருக்குள் குதித்து 33 ( )
முருகப்பனைக் காப்பாற்றினான். குளத்திலிருந்து வெளியே வந்த முருகப்பன் அங்கிருந்த பாறை ஒன்றில், "இன்று என் நண்பன் என் உயிரைக் காப்பாற்றினான்,"
என்று **(34)**______. இதைக் கண்ட குமரப்பன் முருகப்பனிடம், "நீ ஏன் முன்பு 34 ( )
மணலிலும் இப்போது பாறையிலும் நான் செய்ததைக் குறிப்பிட்டுள்ளாய்?" என்று கேட்டான். அதற்கு முருகப்பன், "நண்பா! நீ செய்த தீயதை நான் மணலில்
எழுதியதால் அது காற்றோடு **(35)**______. ஆனால் நீ என் உயிரைக் காப்பாற்றியது 35 ( )
கல்லில் பொறிக்கப்பட்டதால் அது என்றும் அழியாமலே இருக்கும்," என்று கூறினான்.

| | | |
|---|---|---|
| (1) கடந்தனர் | (2) தாமதிக்காமல் | (3) அடைந்தனர் |
| (4) தொடங்கியது | (5) அழிந்துவிடும் | (6) வழுக்கி |
| (7) செதுக்கினான் | (8) குழம்பி | (9) உண்டானது |
| (10) திகைத்து | (11) தடுக்கி | (12) எழுதினான் |



14

<u>சுயவிடைக் கருத்தறிதல்</u>
பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி. பின் 36 முதல் 41 வரை உள்ள வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிந்து எழுது

ஓர் ஊரில் சின்னான் என்ற ஒரு துணி வியாபாரி இருந்தான். அவன் மிகுந்த புத்திக்கூர்மை உடையவன். ஒருவரைப் பார்த்தவுடன் அவரது மதிப்பை எடைபோடும் திறனும் சின்னானுக்கு இருந்தது. சின்னான் எப்போதும் தன் வேலைகளைச் சுறுசுறுப்புடனும் மலர்ந்த முகத்துடனும் செய்வான். அவன் எல்லோரிடமும் பணிவாகப் பேசுவான். சின்னானை அந்த ஊர் மக்கள் அனைவரும் விரும்பினர். இதனால் அவனுடைய வியாபாரமும் செழித்து வளர்ந்தது.

ஒரு சமயம் சின்னான் வெளியூருக்குச் சென்று வியாபாரத்தைத் தொடர்ந்தான். அந்த ஊரில் பெரிய பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் ஊர் மக்கள் தன்னை மட்டும் புகழ வேண்டும் என்று எண்ணுபவன். அதற்கு எதிராக அவர்கள் வேறு யாரையாவது புகழ்ந்துப் பேசினால் அவன் கடும் சினம் கொண்டு அவர்களைத் தண்டித்துவிடுவான். இத்தகைய தீய குணம் கொண்டவனை மக்களுக்குப் அறவே பிடிக்கவில்லை. சின்னான் அந்த ஊரில் வியாபாரத்தைத் தொடங்கியதும் ஊர் மக்கள் அவனைப் புகழ்ந்துப் பேசினர். இதைக் கண்ட பணக்காரன் பொறாமை கொண்டு சின்னானைத் தண்டிக்க எண்ணினான். அவன் சின்னானைத் அன்றிரவு தன் வீட்டுக்கு அழைத்தான்.

பணக்காரனின் சூழ்ச்சியை அறியாமல் சின்னான் அவனுடைய வீட்டுக்குச் சென்றான். அவனை வெறுப்புடன் பார்த்தப் பணக்காரன், “நீ மிகுந்தத் திறமைசாலியா?” என்று கேட்டான். அதற்குச் சின்னான், “என்னால் ஒருத்தரைப் பார்த்தவுடன் அவருடைய மதிப்பை எடை போட முடியும் என மக்கள் கூறுகிறார்கள். கடவுள் அருளால் எனக்கு அப்படி ஒரு திறமை இருப்பதை நானும் நம்புகிறேன்,” என்று பதிலளித்தான்.

இதைக் கேட்டுக் கலகலவென சிரித்தப் பணக்காரன் சின்னான் ஊர் மக்களை ஏமாற்றுவதாகக் கூறினான். பின் அவன் சின்னானைச் சோதித்துப் பார்க்க எண்ணி அவனிடம் தன் மதிப்பு என்ன என்பதைக் கேட்டான்.

சின்னான் பணக்காரனை உற்று நோக்கி அவனின் மதிப்புப் பத்து வெள்ளி என்று கூறினான். இதைக் கேட்டப் பணக்காரனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. தான் ஒரு பெரிய பணக்காரன் என்பதால் சின்னானுக்குத் தன் மதிப்பைக் கணக்கிடுவதில் சிரமம் இருக்கும் என்று எதிர்ப்பார்த்தான். ஆனால் சின்னான் எந்த ஒரு தயக்கமும் இன்றி பணக்காரன் சட்டைப் பைக்குள் வைத்திருந்த பணத்தை வைத்துப் பணக்காரனை மதிப்பிட்டதால் அவன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

அதற்கு சின்னான், "ஒரு மனிதனை அவனது குணத்தை வைத்து தான் மதிப்பிட முடியும். உங்களை உயர்வாக மதிப்பிடும் அளவுக்கு உங்களுக்கு நல்ல குணம் இல்லை. அதனால்தான் உங்கள் சட்டைப் பைக்குள் இருந்த பத்து வெள்ளியை மட்டும் வைத்து உங்களை மதிப்பிட்டேன்," என்று கூறினான்.

சின்னானின் புத்திசாலித்தனமான பதிலைக் கேட்டுப் பணக்காரன் தன் தீய குணத்தை விட்டு நல்லவனாக மாறினான். அவன் சின்னானிடம் மன்னிப்புக் கேட்டு தனக்கு நல்ல பாடம் கற்பித்ததற்காக அவனிடம் நன்றியும் கூறினான்.

36 முதல் 41 வரை உள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

36. சின்னானின் வியாபாரம் பெருகக் காரணம் என்ன? (3 மதிப்பெண்கள்)

37. ஊர் மக்கள் பணக்காரனை வெறுக்கக் காரணம் என்ன? (3 மதிப்பெண்கள்)

38. சின்னான் தன் திறமையைப் பற்றிப் பணக்காரனிடம் என்ன கூறினான்? (3 மதிப்பெண்கள்)

39. பணக்காரன் அதிர்ச்சியடையக் காரணம் என்ன? (3 மதிப்பெண்கள்)

40. பணக்காரனுக்கு எது குழப்பத்தை ஏற்படுத்தியது? (4 மதிப்பெண்கள்)

41. பணக்காரனின் குழப்பத்தைத் தீர்க்க சின்னான் என்ன விளக்கமளித்தான்? ( 4 மதிப்பெண்கள்)

Primary - 5

**P5 SA2**
**TESTPAPER 3**

சங்கர் என்பவர் ஒரு.........

1. 2 2. 4 3. 1 4. 2 5. 4 6. 3

7. 2 8. 4 9. 2 10. 3 11. 1 12. 3

13. 3 14. 2 15. 3 16. 2 17. 4

18. 3 19. 2 20. 1

21. 3 22. 2 23. 4

24. 4 25. 1 26. 3 27. 5 28. 9

29. 9 30. 10 31. 3 32. 6 33. 2 34. 7 35. 5

36. சின்னான் எப்போதும் தன் வேலைகளைச் சுறுசுறுப்புடனும் மலர்ந்த முகத்துடனும் செய்வான். அவன் எல்லோரிடமும் பணிவாகப் பேசுவான். சின்னானை அந்த ஊர் மக்கள் அனைவரும் விரும்பினர். இதுவே சின்னானின் வியாபாரம் பெருகக் காரணம் ஆகும்.

37. பணக்காரன் ஊர்மக்கள் தன்னை மட்டும் புகழ வேண்டும் என்று எண்ணுபவன். அதற்கு எதிராக அவர்கள் வேறு யாரையாவது புகழ்ந்து பேசினால் அவன் கடும் சினம் கொண்டு அவர்களைத் தண்டித்து விடுவான். இத்தகைய தீய குணம் கொண்டவனை மக்களுக்கு அறவே பிடிக்கவில்லை. இதுவே ஊர் மக்கள் பணக்காரனை வெறுக்கக் காரணமாகும்.

38. பணக்காரன் வெறுப்புடன் கேட்ட கேள்விக்குச் சின்னான் தன்னால் ஒருவரைப் பார்த்தவுடன் அவரது மதிப்பை எடை போட முடியும் என மக்கள் கூறுகிறார்கள் என்றும் கடவுள் அருளால் அவனுக்கு அப்படிப்பட்ட திறமை இருப்பதை அவனும் நம்புவதாகவும் பதிலளித்தான்.

39. பணக்காரன் சின்னானைச் சோதித்துப் பார்க்க எண்ணி அவனிடம் தன் மதிப்பு என்ன என்பதைக் கேட்டான். சின்னான் பணக்காரனை உற்று நோக்கி அவனின் மதிப்பு பத்து வெள்ளி என்று கூறினான். இதுவே பணக்காரன் அதிர்ச்சி அடையக் காரணமாகும்.

P5 SA2
TESTPAPER 3

40. தான் ஒரு பெரிய பணக்காரன் என்பதால் சின்னானுக்குத் தன் மதிப்பைக் கணக்கிடுவதில் சிரமம் இருக்கும் என்று பணக்காரன் எதிர்பார்த்தான். ஆனால் சின்னான் எந்த ஒரு தயக்கமும் இன்றி அவன் சட்டைப் பைக்குள் வைத்திருந்த பணத்தை வைத்து அவனை மதிப்பிட்டதே பணக்காரனுக்குக் குழப்பத்தை ஏற்படுத்ஹியது.

41. சின்னான் பணக்காரனிடம், ஒரு மனிதனை அவனது குணத்தை வைத்துத் தான் மதிப்பிட முடியும் என்றும் பணக்காரனை உயர்வாக மதிப்பிடும் அளவுக்கு அவனுக்கு நல்ல குணம் இல்லை என்றும் அதனால்தான் அவன் சட்டைப் பைக்குள் இருந்த பத்து வெள்ளியை மட்டும் வைத்து அவனை மதிப்பிட்டதாகவும் கூறினான். இவ்வாறு புத்திசாலித்தனமாகப் பேசி சின்னான் பணக்காரனுக்கு விளக்கமளித்தான்.